10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 129 புதன்கிழமை செப்ரெம்பர் 27 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## விஜயகலாவிலும் தவறு
### நீதிமன்றம் கண்டிப்பு



அமைச்சர் விஜய கலா மகேஸ்வரன் வித்தியா வழக்கில் சுவிஸ் குமார் விடயத்தில் நடந்து கொண்ட விதம் தொடர்பில் நீதிபதி இளஞ்செழியன் விமர்சனம் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்பட்டது. நீதிபதி இளஞ்செழியன் தனது 345 பக்கத் தனித் தீர்ப்பின் சுருக்கத்தை வாசித்த போதே அமைச்சர் விஜயகலாவின் செயலை விமர்சித்துள்ளார். வித்யா கொலை செய்யப்பட்பின் ஊர்ப் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சுவிஸ்குமார் மின்சாரக் கம்பம் ஒன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்தார். அங்கு சென்ற அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் சுவிஸ் குமாரை பொதுமக்களிடத்திலிருந்து

06

## வித்யா கொலை வழக்கு: குற்றவாளிகள் 7 பேருக்கு
# தூக்கு!





புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில், 7 எதிரிகள் குற்றவாளிகள் என்று சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுவதாகவும் தீர்ப்பாயத்தின் மூன்று நீதிபதிகளும், தீர்ப்பளித்துள்ளனர்.

2ஆம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமார், 3ஆம் எதிரியான பூபாலசிங்கம் தவக்குமார்,5ஆம் எதிரியான தில்லைநாதன் சந்திரகாசன், 6ஆம் எதிரியான சிவதேவன் துஷாந்தன் ஆகியோர் வித்யாவைக் கடத்த திட்டம் தீட்டியமை, கடத்தியமை, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை, படுகொலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக மரண தண்டனையும் 30 வருட சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. அவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா தண்டமும் தண்டம் செலுத்தத் தவறின் நான்குமாதச் சிறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடும் இழப்பீடு

06

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு, இன்று வழங்கப்பட்டது. இந்த நிலையில் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்வதைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற வளாகத்தில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிஸாருக்கு மேலதிகமாக, விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் நிறுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் அனைவரும், கடுமையான பாதுகாப்பு மத்தியில் சிறைச்சாலை பஸ்ஸில் அழைத்து வரப்பட்டனர். வழக்கின் தீர்ப்பை அறிவதற்காக நீதிமன்றத்தின் வளாகத்தில் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர். (எ)

## யாழ். நீதிமன்றுக்குக் கடும் பாதுகாப்பு

## மன்றில் மயங்கினார் வித்யாவின் தாய்



வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 7 பேருக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்துள்ள நிலையில் வித்தியாவின் தாய் மன்றில் மயங்கி வீழ்ந்துள்ளார். வித்தியா படுகொலை வழக்கின்

06

## 470 பக்கத்தில் தீர்ப்பு

புங்குடுதீவு மாணவி வித்யா கொலை வழக்குப் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இன்று யாழ். மேல் நீதிமன்றத்தில் அமைக்கப்பட்ட ட்ரயல்-அட்பார் நீதாய நீதிபதிகளினால் 470 பக்கத் தீர்ப்பு வாசிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மூன்று நீதிபதிகளைக் கொண்ட தீர்ப்பாயத்தின் தலைவரான,

06

## பட்டாசு கொளுத்தி மக்கள் ஆரவாரம்

வித்யா கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதித்து, யாழ். மேல் நிதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து, பொதுமக்கள் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்ததுடன், நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது எனவும் கோஷமிட்டனர்.

இதனால், யாழ். நகரம், பட்டாசுச் சத்தத்தால் அதிர்ந்தது.

## இருவர் விடுதலை

புங்குடுதீவு மாணவி வித்யா கொலை வழக்கில் குற்றச் சந்தேக நபர்களாக அடையாளப் படுத்தப்பட்ட இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றித்தினால் முதலாம் எதிரியாக அடையாளப் படுத்தப்பட்ட

06

## மூன்று மாதத்தில் காணிகள் விடுவிப்பு

வவுனியா முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்களில் எதிர்வரும் மூன்று மாதங்களில் படையினர் வசம் உள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு பாதுகாப்பு தரப்பினர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் விடுவிக்க முடியாத காணிகள் தொடர்பாக மாற்று திட்டம் ஒன்றை செயல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டதாகவும் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மன்னார் முல்லைத்தீவு பகுதிகளில் பாதுகாப்பு பிரிவினர் வசம் உள்ள பாடசாலைகள் ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல், விகாரைகள், சுகாதார நிறுவனங்களை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வவுனியா அரசாங்க அதிபர் கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணிகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை பெற்றுத் தருமாறும் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## நோபல் பரிசுக்கு மைத்திரியின் பெயர்



அமைதிக்கான நோபல் பரிசுக்கான பரிந்துரைப் பட்டியலில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசு அடுத்த மாதம் அறிவிக்கப்படவுள்ள நிலையில், இந்தப் பரிசுக்கு தகுதி பெற்றவர்களின் பட்டியல் ஒன்றை அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம் வெளியிடவுள்ளது. சுயாதீன மதிப்பீடுகளின் அடிப்படையில், அமைதிக்கான ஒஸ்லோ ஆய்வு நிறுவகம், 2002ஆம் ஆண்டு முதல் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படக் கூடியவர்களின் தகுதிப்பட்டியல் ஒன்றை வெளியிட்டு வருகிறது. இதன்படி இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுக்கு தெரிவு செய்யப்படக் கூடியவர்களின் பட்டியலில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரையும் உள்ளடக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.இலங்கையில் அமைதி, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக இவருக்கு இந்தப் பரிசை அளிக்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (எ)

# சிறுபான்மையினருக்கு 50:50 வேண்டும்



நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் திருத்த யாப்பில் முன்மொழியப்பட்டுள்ள மேற்சபையில் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவம் 50 இற்கு 50 என்றவாறு அமையப்பெற வேண்டும் எனத் தாம் வலியுறுத்தியுள்ளதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரச் செயலாளர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவித்த அவர்,

அதிகாரப்பகிர்வு மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையும் கேள்விக்குறியாவதுடன் உருவாக்கப்படவுள்ள மேற்சபையின் நோக்கமும் அர்த்தமற்றதாக அமைந்துவிடும். இதன் காரணமாகவே சிறுபான்மையின மக்களுக்கு பயனதர வல்லதாக 50 இற்கு 50 என்ற விகிதாசாரத்தை நாம் வலியுறுத்திவருகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# உலகின் மிகப் பெரிய புத்தக விற்பனை




உலகின் மிகப்பெரிய புத்தக விற்பனையாகக் கருதப்படும் "பிக் பாட் வுல்வ்" புத்தக விற்பனை முதற்தடவையாக இலங்கையில் நடைபெறவுள்ளது. கொழும்பு கண்காட்சி மற்றும் மாநாட்டு மத்திய நிலையத்தில் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இடம்பெறும். உலகம் முழுவதும் வாசிக்கப்படும் சுமார் 2 ஆயிரம் பிரபல ஆங்கில புத்தகங்கள் உள்ளிட்ட 15 இலட்சத்திற்கும் அதிகமான புத்தகங்கள் இங்கு விற்பனை செய்யப்படும். இந்த புத்தக விற்பனை 24 மணி நேரமும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. (உ)

# குக்குலே கங்கையின் வான் கதவு திறப்பு

குக்குலே கங்கையின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து களுத்துறை மாவட்டத்தில், புளத்சிங்கள, அகலவத்தை, மதுராவெல மற்றும் இங்கிரிய ஆகிய தாழ்நில பிரதேசங்களில் வாழ்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு, எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சில தினங்களாக களுத்துறை மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் கடும் மழை பெய்து வருகின்றது. இந்நிலையிலேயே வான் கதவு திறக்கப்பட்டதோடு மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதே வேளை குறித்த பிரதேசங்களில் மண் சரிவு அபாயம் குறித்த எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (உ)

# ப.நோ.கூ. சங்கங்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு




வட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கம், வேலணை ப.நோ.கூ. சங்கம் ஆகியவற்றுக்கு தலை ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார்.

அந்த நிதியிலிருந்து நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு கணனி ஒன்றினையும், வேலணை, புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கங்களுக்கு போட்டோ கொப்பி இயந்திரங்களையும், ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்திற்கு அலுமாரிகள் மற்றும் உபகரணங்களும் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வு நேற்று முன்தினம் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எஸ். மோகன் தலைமையில் நடைபெற்றது. (உ)

## 9 மணிக்கு மேல் கடைகளைத் திறந்தால்

# விளைவுகளுக்கு நாம் பொறுப்பல்ல

அழகக உரிமையாளர்கள் இரவு 9 மணிக்கு மேல் கடைகளைத் திறந்து வைத்திருக்கும் செயலை வட மாகாணத்தில் தற்போது இடம்பெறும் கஞ்சாக் கடத்தல், வாள்வெட்டுப் போன்ற சம்பவங்களுடன் முடிச்சுப் போடவேண்டாம் என வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம், இரவு 9 மணிக்குப் பிறகு அழகக நிலையங்கள் திறந்திருந்தாலோ அந்நேரத்தில் அங்கு மக்கள் சிகையலங்காரம் செய்தாலோ ஏற்படும் பிரச்சினைகளுக்குச் சம்மேளனம் பொறுப்பேற்க மாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அழகக நிலையங்களில் ஒரு சிலர் இரவு 10 மணிக்கு மேல் கதவுகளைப் பூட்டி விட்டு நிற்கின்றனர். அதற்கு என்ன காரணம்? அவர்கள் யார்? அவர்களைப் பற்றிய விடயங்களைத் தந்துதவுமாறு தம்மிடம் கோரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள சங்கம் நேரக் கட்டுப்பாட்டை மீறித் தொழில் புரியும் நிலைய உரிமையாளர்களுக்கோ அல்லது வாடிக்கையாளருக்கு எதிராக பொலிஸார் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளுக்கும் சம்மேளனம் எந்த வித இடையூறையும் வழங்காது ஒத்துழைக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. (உ)

# சிரமதான நடவடிக்கை






மத்தொனி கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஒத்துழைப்புடன் கரவெட்டி பிரதேசசெயலகத்தினால் சிரமதான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது வயல் மேட்டு நிலப்பகுதியில் உள்ள கருவேல மரங்களை அழித்து அகற்றும் வேலைத்திட்டம் மற்றும் கழிவு கொட்டப்படும் இடங்களில் இருக்கும் கழிவுகளை அகற்றும் நடவடிக்கையும் மேற்கொளஎப்பட்டது. (உ–11)

# எச்சரிக்கும் அமெரிக்கா




டிரம்ப் அரசாங்கம் வடகொரியா மீது போர் தொடுக்கும் நிலை ஏற்பட்டால் தினசரி 20,000 அப்பாவி மக்கள் தென் கொரியாவில் கொல்லப்பட வாய்ப்பு உள்ளதாக முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார். வடகொரியா மற்றும் அமெரிக்கா இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் அமெரிக்காவின் முன்னாள் விமானப்படைத் தலைமை அதிகாரி ஒருவர் வெளியிட்டுள்ள தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதில் வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா போர் தொடுக்கும் எனில் தென் கொரியாவில் உள்ள 20,000 அப்பாவி மக்கள் தினசரி கொல்லப்பட வாய்ப்பு உள்ளதாகவும்,இது அணு ஆயுதம் பயன்படுத்தினால் பல மடங்கு அதிகரிக்கும் எனவும் கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். தொடர் ஏவுகணைச் சோதனைகளில் ஈடுபட்டு வரும் வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இதன் காரணமாக இரு நாட்டுக்கும் இடையே போர் ஏற்படும் அபாயம் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் தங்கள் நாட்டின் மீது அமெரிக்கா போர் அறிவித்துள்ளதாக வடகொரியா கூறியுள்ளதை அபத்தம் என்று அமெரிக்கா விமர்சித்துள்ளது. மேலும் அதிரடிப் பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்துவதால் மட்டுமே வடகொரியா கட்டுக்குள் வரும் என்ற நிலைப்பாட்டில் சீனாவும் தற்போது களமிறங்கியுள்ளது.முன்னதாக அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத் தடைகள் தங்களை எதுவும் கட்டுப்படுத்தாது என வடகொரியா பகிரங்கமாக அறிவித்துள்ளது.



## மைக்கேல் ஜாக்சன் உயிருடன் ஊடகங்கள் தகவல்

பொப் இசை உலகின் சக்கரவர்த்தி மைக்கேல் ஜாக்சன் இன்னும் உயிருடன் இருப்பதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டு வருகின்றன. லூர்த்து என்ற பெண்ணினால் ருவிட்டரில் வெளியிடப்பட்ட சில புகைப்படங்களின் காரணமாகவே இந்தச்செய்தி வெளியாகியுள்ளது. தனது காதலர் எனக் குறிப்பிட்டு அவர் சில புகைப்படங்களைப் பதிவிட்டுள்ளார் . மைக்கேல் ஜாக்சனின் உருவத்துக்கு சமமான இந்த நபரின் புகைப்படத்தை அவதானித்த பலர் இது மைக்கேல் ஜாக்சன் என நம்பியுள்ளனர். இது தொடர்பில் சர்வதேச ஊடகமொன்று அந்த பெண்ணிடம் கருத்து கேட்டுள்ளது. அதற்குக் குறித்த பெண்இந்தப் புகைப்படங்களைத் தான் ருவிட்டரில் இருந்து எடுத்ததாகவும், அவர் யார் என தனக்கு தெரியாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எப்படியிருப்பினும் இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும், இந்த புகைப்படங்களில் இருப்பவர் ஸ்பெயின் நாட்டின் இசைக் கலைஞரான கோர்டிஸ் என தெரிய வந்துள்ளது.மைக்கேல் ஜாக்சனை போன்று இவரும் பாடல் பாடுவது மற்றும் நடனம் ஆடுவதில் பிரபலமானவர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

## சவுதியில் பெண்களுக்கு சாரதி அனுமதி



நாட்டில் முதன் முறையாகப் பெண்கள் வாகனம் ஓட்ட அனுமதிக்கும் ஆணையொன்றை சவுதி அரேபியா மன்னர் சல்மான் பிறப்பித்துள்ளதாக அந்த நாட்டின் அரச ஊடகம் தெரிவிக்கிறது.
இது குறித்த அறிக்கைகளை அரசு அமைச்சரவைகள் 30 நாட்களுக்குள் தயார் செய்யவுள்ளதாகவும், 2018 ஜூன் மாதத்துக்குள் இது தொடர்பான ஆணை நடைமுறைப் படுத்தப்படும் என்றும் குறிப்பிடப்படுகிறது. தற்போது சவுதி அரேபியாவில் உள்ள சட்டத்தின்படி ஆண்களுக்கு மட்டுமே சாரதி உரிமம் வழங்கப்படுகிறது. பொது வெளியில் வாகனம் ஓட்டிச் செல்லும் பெண்கள் கைது செய்யப்படவும், அபராதம் விதிக்கப்படவும் வாய்ப்புள்ளது. ஆனால் தற்போதைய நடைமுறை சட்டத்தால் பல குடும்பங்களும் தங்கள் வீட்டு பெண்கள் பயணம் செய்யத் தனியார் சாரதிகளைப் பணியில் அமர்த்துகின்றனர். சவுதியில் உள்ள உரிமைகள் குழுக்கள், பெண்களை வாகனம் ஓட்ட அனுமதிக்க வேண்டுமென கோரி பல ஆண்டுகளாக பிரசாரம் செய்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அதிரடி மாற்றம்





பீகார் மாநில காங்கிரசில் கோஷ்டியில் பூசல் நிலவுகிறது. கட்சியில் ஒரு பிரிவினர் இந்திய முதல் மந்திரி நிதிஷ்குமாருக்குச் சாதகமாகச் செயற்படுவதாகக் கட்சி மேலிடத்துக்குப் புகார்கள் வந்தன.பீகார் மாநில காங்கிரஸ் தலைவர் அசோக் சவுத்திரி“ கட்சியில் உள்ள சில நிர்வாகிகள் தனக்கு எதிராகச் செயற்படுவதாகவும், கட்சியில் பிளவு ஏற்படுத்தச் சதி செய்வதாகவும் தவறான தகவலைப் பரப்பி வருகின்றனர் எனப் பரபரப்புப் புகார்களைத் தெரிவித்தார்.தனக்கு எதிராக பரப்பப்படும் வதந்திகளுக்குப் பின்னால் சில மேலிடத் தலைவர்கள் இருப்பதாகவும், கட்சியை உடைக்க முயற்சிப்பதாகக் கூறித் தன்னைத் தலைவர் பதவியில் இருந்து நீக்க முயற்சிக்கிறார்கள்” என்றும்கூறினார்.
பீகாரில் மகா கூட்டணியில் பிளவு ஏற்பட்டதும் மாநில காங்கிரசில் கோஷ்டி பூசல் நிலவி வருகிறது. இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க இந்த மாதத் தொடக்கத்தில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்தி ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.மாநில தலைவர் அசோக் சவுத்திரிக்கு அழைப்பு அனுப்பியும், அவர் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து விட்டார். இந்த நிலையில் மேலிடத் தலைவர்கள் மீதே, அசோக் சவுத்திரி குற்றச்சாட்டுகளை கூறியதைத் தொடர்ந்து அவரை மாநில காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து நீக்கி, காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி நடவடிக்கை எடுத்துள்ளார். அவருக்குப் பதில் தற்காலிகத் தலைவராக வகாப் காத்ரி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னாள் மத்திய மந்திரி அகிலேஷ் பிரசாத் சிங்குக்கு நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை: வீடியோ எடுத்த இளைஞர்கள்

ஆந்திராவில் ஒரு சிறுமிக்கு 3 வாலிபர்கள் பாலியல்தொல்லை கொடுத்து அதை வீடியோ எடுத்த பதிவு வாட்ஸ்-அப்பில் பரவியது. துன்புறுத்தலுக்கு ஆளான அந்த சிறுமியை மற்றொரு சிறுமி காப்பாற்ற முயன்ற காட்சியும் இருந்தது.இது ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக பொலிஸார் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து விசாரணையில் இறங்கினர். இதில் இந்தச் சம்பவம் பிரகாசம் மாவட்டத்தில் நடந்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த 3 வாலிபர்களை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 3 பேரில் கார்த்திக் என்பவருடன் சிறுமி பழக்கம் வைத்துள்ளார். திடீரென அந்த பழக்கத்தை நிறுத்திக் கொள்ளச் சிறுமி முடிவு செய்ததால் ஆத்திரம் அடைந்த கார்த்திக் தனது நண்பர்கள் சாமி, பவன் ஆகியோருடன் சேர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வீடியோ எடுத்துள்ளார். அதை அவர் தனது நண்பர்களுக்கு வாட்ஸ்-அப்பில் அனுப்பி இருக்கிறார்.வாட்ஸ்அப் வீடியோ மூலம் 3 பேரும் பொலிசில் சிக்கி உள்ளனர்.சிறுமியை மீட்க முயன்ற பெண்ணை இந்த வழக்கில் பொலிஸார் சாட்சியாகச் சேர்த்துள்ளனர்.

## பிரான்ஸில் பெற்றோல் தட்டுப்பாடு

அரசின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து லொறிசாரதிகள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பிரான்ஸில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பிரான்ஸ் அரசு கொண்டு வந்துள்ள பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து லொறிச் சாரதிகள் கடந்த இரண்டு நாட்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் நாட்டில் உள்ள பெற்றோல் நிலையங்களில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.வாகனச் சாரதிகள் பெற்றோல் கிடைக்கவே கிடைக்காது எனப் பயப்படுவதால்முன்னெச்சரிக்கையாக அதிகளவு பெற்றோலை வாகனத்துக்குப் போட்டு கொள்கின்றனர். இப்படி எல்லோரும் செய்தால் பெற்றோல் தட்டுப்பாடுப் பிரச்சினை மேலும் அதிகரிக்கவே செய்யும். லொறி சாரதிகள் போராட்டம் இன்னும் சில தினங்கள் தொடர்ந்தால்பெற்றோல் தட்டுப்பாடு பிரான்ஸில் பெரிய பிரச்சினையாக உருவாகும் எனக்கூறப்படுகிறது.

## தேசிய குழந்தை தொழிலாளர் ஒழிப்பு மாநாடு



டெல்லியில் நேற்று, தேசிய குழந்தை தொழிலாளர் ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. மத்திய உள்துறை மந்திரி ராஜ்நாத் சிங் தலைமையில், மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மந்திரி சந்தோஷ்குமார் கங்வார் முன்னிலையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் தமிழகத்தின் சார்பில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் நிலோபர் கபில் கலந்து கொண்டார்.
“இந்த மாநாட்டில் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு அமுலாக்க மேடை என்ற இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தித் தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத நிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம். குழந்தை தொழிலாளர்களை ஒழிக்க ஜெயலலிதா பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.
இவர்களுக்கென 15 மாவட்டங்களில் சிறப்புப் பள்ளிகளை அவர் உருவாக்கினார். குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்கள் முதல் அனைத்து கல்வி உபகரணங்களும் விலையின்றி வழங்கப்படுகிறது. இதனால் குழந்தைகள் பெற்றோருக்கு பாரமாக தெரியவில்லை. குழந்தைகள் கடத்தல் தமிழ்நாட்டில் பெரிதாக இல்லை” எனத் குறிப்பிட்டார்.

# யாழின் கில்லாடி யார்? இரு காலிறுதிகள் இன்று

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தி வரும் 'யாழின் கில்லாடி யார்?' உதைபந்தாட்டத் தொடரின் இரு காலிறுதியாட்டங்கள் இன்று இரவு நடைபெறவுள்ளன.

இதில் இன்று இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் தேசிய அணி வீரர்கள் பலரைக் கொண்ட வலிமைமிக்க அணியான இளவாலை ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழின் தலைசிறந்த அணிகளில் ஒன்றாக விளங்கும் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு நடைபெறும் இரண்டாவது காலிறுதியில், யாழின் பல தொடர்களை வசப்படுத்திய மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தொடரைக் கைப்பற்றிய இறுமாப்புடன் யாழ். பல்கலைக்கழகம் களம் காண்கிறது. (ஐ)

# குறிஞ்சிக்குமரன், சரஸ்வதி முன்னேற்றம்

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் குறிஞ்சிக்குமரன் மற்றும் சரஸ்வதி விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

இத்தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம், 4:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

பின்னர் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில், கோல் மழை பொழிந்த சரஸ்வதி விளையாட்டுக் கழகம் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)

# நவஜீவன்ஸை வென்றது மனோகரா

## எதிரணி வரவின்மையால் விண்மீனுக்கு வெற்றி



மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்றைய ஆட்டங்களில், மனோகரா மற்றும் விண்மீன் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவான மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் இரு அணிகளும் அடுத்தடுத்துக் கோல்களைப் போட்டன.

இறுதியில், மனோகரா 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மனோகரா சார்பாக சர்மிலன, மிதுஷன் ஆகியோர் தலா இரு கோல்களைப் போட்டனர். நவஜீவன்ஸ் சார்பாக பொபிநாதன் இரு கோல்களையும் கௌதமன் ஒரு கோலையும் போட்டனர்.

ஆட்ட நாயகனாக மனோகரா அணி வீரரான சர்மிலன் தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாவது போட்டியில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதவிருந்தது. இதில் உதயதாரகை விளையாட்டுக்கழகம் வருகைதராமையால் விண்மீன் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ஐ)

# திக்கம் அசத்தல்: டயமன்ஸை வீழ்த்தியது



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டங்களில், திக்கம் விளையாட்டுக் கழகம் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது.

அணிக்கு 7 பேர் கொண்டதாக நடத்தப்படும் இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில், திக்கம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி எதிரணிக்குச் சவால் விடுத்த திக்கம் விளையாட்டுக் கழகம், 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஐ)

# கலைமதியின் முடிவுகள்

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரு ஆட்டங்கள் நடைபெற்றன.

இதில், முதலில் நடைபெற்ற போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம், தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தை 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மற்றொரு போட்டியில் குடத்தனை சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம், 4:3 என்ற கோல் கணக்கில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை, 'பனால்டி' உதை மூலம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)



# கிரிக்கெட்டில் சிவப்பு அட்டை

சர்வதேசக் கிரிக்கெட் விதிமுறைகளில் அதிரடி மாற்றம் நாளை முதல் நடைமுறைக்கு வருகிறது. இதன்படி களத்தில் மோசமாக நடந்து கொள்ளும் வீரர் உதைபந்தாட்டப் பாணியில் வெளியேற்றப்படுவார்.

அதாவது, நடுவரைத் தாக்குவது, மிரட்டுவது, வேண்டுமென்றே இடிப்பது, வீரர்களுடனோ அல்லது வேறு நபர்களுடனோ உடல் ரீதியாக மோதலில் ஈடுபடுவது, இதர வன்முறைகள் ஆகியவற்றைக் குற்றமாகக் கருதி சம்பந்தப்பட்ட வீரரை நடுவர் உடனடியாக களத்தை விட்டு வெளியே அனுப்பலாம்.

அத்துடன், மேலும் பல புதிய நடைமுறைகள் நாளை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்திய - ஆஸ்திரேலிய அணிகள் நாளை மோதும் ஆட்டத்தில் இந்த நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிக்பாஸின் அறிவிப்பால்

# விழி பிதுங்கிய போட்டியாளர்கள்

'பிக்பாஸ்' நிகழ்ச்சி வரும் சனிக்கிழமையுடன்முடிவடையவுள்ளமையால்போட்டியாளர்கள் மத்தியில் மட்டுமல்லாது இரசிகர்கள் மத்தியிலும் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதில், இன்றைய நிகழ்ச்சிக்காக வெளியிடப்பட்டுள்ள ப்ரோமோவில் அனைவர் முன்னிலையிலும் ஒரு பெட்டிக்குள் 10 இலட்சம் ரூபா பணம் வைத்திருக்கிறது. அதை யார் தேவையானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என 'பிக்பாஸ்' அறிவிக்கிறார். இதனால் ஆச்சரியத்தில் மூழ்கிய போட்டியாளர்கள், அடுத்ததாக 'பிக்பாஸ்' சொன்ன வசனத்தால், விழி பிதுங்கினர்.

அதாவது, பணத்தை எடுப்பவர் உடனடியாக வீட்டை விட்டு வெளியேற வேண்டும்.

என்ன நடக்கிறது என்பதை இன்றைய நிகழ்ச்சியில் பார்க்கலாம். (ஒ)

# சிங்கத்துக்கு நரி அறிவுரை கூறுவதா?

'பிக்பாஸ்' நிகழ்ச்சியிலிருந்து வெளியேறிய பின்னர் காயத்திரி ரகுராம், ருவிட்டரிலும் சர்ச்சைக்குரியவராக மாறியுள்ளார்.

அவர் போடும் ஒவ்வொரு ருவிட்களும் ஏனையவர்களைக் கிண்டல் செய்யும் வகையில் அமைகின்றன.

அந்த வகையில் நேற்று அவர் போட்டுள்ள ருவிட்டில்,

"சிங்கத்துக்கு நரி அறிவுரை கூறுகிற தென்றால் கண்டிப்பாக வஞ்சத்தோடு தான் இருக்கும்" என்ற பிரபல கவிஞரின் தத்துவத்தைப் பதிவேற்றியுள்ளார். யாரை மனதில் வைத்து இதைக் கூறியுள்ளார் என்று தெரியவில்லை.



ஆனால் வழக்கம்போல ரசிகர்கள் அவரைத் திட்டி ருவிட் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். (ஒ)



# ஆவியாகும் ஓவியா!

'யாமிருக்க பயமே' படத்தை இயக்கிய டிகே, அடுத்ததாக இயக்கவிருக்கும் 'காட்டேரி' படத்தில் ஆதி சாய்குமார் - ஓவியா இணைந்து நடிக்கவுள்ளனர்.

டிகே இயக்கத்தில் 2014ஆம் ஆண்டு வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்ற படம் 'யாமிருக்க பயமே'.

திரில்லர் கலந்த நகைச்சுவைப் படமாக வெளியான இந்தப் படத்தில் கிருஷ்ணா, ரூபா, ஓவியா, கருணாகரன் ஆகியோர் முக்கிய கதபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

இந்தநிலையில், 3 வருட இடைவெளிக்குப் பிறகு டிகே அடுத்ததாக இயக்கவிருக்கும் புதிய படத்துக்கு 'காட்டேரி' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் நாயகனாக ஆதித்யா சாய்குமார் அறிமுகமாகிறார். நாயகியாக ஓவியா நடிக்கிறார்.

ஏற்கெனவே சந்தோஷ் ஜெயக்குமார் இயக்கத்தில் கவுதம் கார்த்திக் - ஓவியா இணைந்து 'இருட்டு அறையில் முரட்டு குத்து' என்ற பேய்க் கதையில் நடிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், மற்றொரு பேய்ப்படத்தில் ஓவியா ஒப்பந்தமாகியுள்ளார். (ஒ)

# குடிதண்ணீர் திட்டம்

பதுளை தெமோதர ஒன்றிணைந்த குடி தண்ணீர் திட்டம் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையில் இன்று புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. 11ஆயிரத்து 880 மில்லியன் ரூபா இந்த குடிதண்ணீர் திட்டத்துக்குச் செலவிடப் பட்டுள்ளது இந்தத் திட்டம் பதுளை மாவட்டத்தில் இதுவரை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள மிகப்பெரிய குடி தண்ணீர் செயற்றிட்டமாகும். இதன்மூலம் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பயனடையவுள்ளன. உமா ஓயா செயற்றிட்டம் காரணமாக குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்கொண் டுள்ள பதுளை மாவட்டத்தின் சில கிராம மக்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# இன்றைய கருத்தோவியம்




# சுற்றறிக்கைகளுக்காக வேலை செய்யாதீர்கள்

தேசிய உணவு உற்பத்தி மறுமலர்ச்சியை மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற செய்வதற்காக அனைத்து மாவட்ட செயலாளர்களும் பாடுபட வேண்டுமென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் தேசிய உணவு உற்பத்தி மறு மலர்ச்சி திட்டத்துக்கான தொகுதி மட்டத்தில் பொறுப்புக்களை ஒப்படைப் பதற்கான சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. சுற்றறிக்கைகளுக்காக மட் டுமன்றி நாட்டின் எதிர் காலத்துக்காக ஒப்படைக் கப்படும் பொறுப்பாகக் கருதி இந்தச் செயற்றிட்டம் வெற்றி பெறுவதற்காக அனைத்து அரச அலுவலர் களும், அரசியல்வாதிக ளும் பாடுபட வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். கொழும்பு மிலோதா நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற அர சாங்க அதிபர்கள் மாநாட் டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்ட வாறு தெரிவித்தார். (உ)

# மியான்மர் அகதிகள் பூசாவுக்கு மாற்றம்

கல்கிஸைப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த மியான் மர் அகதிகள் 31 பேரும் பூசா தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ரோஹிங்கியா முஸ்லிம் அக திகள் தங்க வைக்கப்பட்டி ருந்த கல்கிஸைப் பிரதேசத் தில் உள்ள வீட்டை பௌத்த பிக்குகள் இன்று சுற்றி வளைத்ததை அடுத்து அங்கு பதற்றமான நிலை தோன்றியிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் குடியேறிகளுக்கான அமைப் பின் பராமரிப்பில் கல் கிஸ்ஸை பகுதியில் உள்ள இரண்டு அடுக்கு வீடொன் றில் பெண்கள், குழந்தை கள் உட்பட 31 ரோஹிங் கியா அகதிகள் தங்க வைக் கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்று ஏற்பட்ட அசாதாரண நிலையினால் மியன்மார் அகதிகளின் பாது காப்பை கருத்திற்கொண்டு, அவர்கள் பூசா தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரி வித்தனர். (உ)

## பொல்கஹமுல்லையில் விபத்து

# சிறுவன் உட்பட மூவர் சாவு!

திக்வெல்ல - மாத்தறை வீதியின் பொல்கஹமுல்லைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ள னர். நேற்று மாலை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்த மான பஸ் வண்டியொன்று முச்சக் கர வண்டியுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது, முச்சக்கர வண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த ஆறு பேர் காயமடைந்த நிலையில், திக்வெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதில், 29 வய தான சாரதி மற்றும் 37 வயதான பெண் ஒருவரும் உயிரிழந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதனையடுத்து, காயமடைந்த நான்கு பெண்களும் சிறுவன் ஒரு வனும் மேலதிக சிகிச்சைகளுக்காக, மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதன்போது 7 வயதான குறித்த சிறுவன் பலியாகியுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (உ)

# மண்சரிவு எச்சரிக்கை

மழையுடன் கூடிய கால நிலை தொடர்ந்தும் நில வினால், மண்சரிவு மற் றும் மண்மேடு இடிந்து விழும் ஆபத்துக்கள் குறித்து அவதானமாக இருக்கும்படி அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. இன்று அதிகாலை 4 மணி முதல் 24 மணித்தியாலங் களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தினால் 3 மாவட்டங்கள் மண்சரிவு ஆபத்துள்ள இடங்களாக பிரகடனப்படுத்தப்பட் டுள்ளன. இதற்கமைய, இரத்தினபுரி, களுத்துறை, நுவரெலியா ஆகிய மாவட் டங்களிலும், எஹலிய கொட, அயகம, இரத்தின புரி, குருவிட்ட, பெல் மடுல்ல, புளத்சிங்கள, பாலிந்தநுவர ஆகிய பிர தேச செயலகப் பிரிவுகளி லும் நுவரெலியாவின் லபுகல பிரதேசத்திலும் ஆபத்தான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதா னமாக இருக்க வேண்டு மென அனர்த்த முகா மைத்துவ நிலையம் எச்ச ரித்துள்ளது. (உ)

# கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு 3500 ரூபா கொடுப்பனவு

கல்வியியல் கல்லூரி மாண வர்களுக்கு தற்போது 3500 ரூபா கொடுப்பனவு வழங் கப்படுவதாக தெரிவித்த கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் இந்தத் தொகையை 5 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்க நட வடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவித் தார். அமைச்சில் நேற்று இடம்பெற்ற தேசிய கணித, விஞ்ஞான ஒலிம் பியாட் கனிஷ்ட போட்டி யில் வெற்றி பெற்றவர்க ளுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வில் கல்வி அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். கல்வியியல் கல்லூரிகளில் கல்வி கற்ப வர்களுக்கு மாதாந்தம் 2500 ரூபா வழங்கப்படுவ தாக முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குண வர்த்தன நேற்று நாடா ளுமன்றத்தில் வெளியிட்ட கருத்தை சுட்டிக்காட்டிய அமைச்சர் அற்ப அரசி யல் இலாபத்திற்காக மக்களை தவறான வழியில் இட்டுச்செல்வதற்கு சிலர் முயற்சிப்பது கவலைக்கு ரிய விடயமாகுமென்றும் கூறினார். (உ)

# ஏற்றுமதி வருமானம் ஒகஸ்டில் அதிகரிப்பு

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் ஏற்றுமதி வரு மானமாக 8 .2 பில்லியன் டொலர் களுக்கும் மேற்பட்ட தொகை பெறப்பட் டிருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத் துக்கு உட்பட்ட ஒரு ஒழுங்கு விதியும் மீள் ஒப்படைத்தல் சட்டத்திற்கு உட்பட்ட 4 ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்துக்கு உரையாற்றுகையிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் இதனை குறிப்பிட்டார். ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகையின் ஊடாக 2018ஆம் ஆண்டில் 350 மில்லியன் டொலர் கள் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் 2020ஆம் ஆண்டா கும் போது ஏற்றுமதி வருமானத்தை 20 பில் லியன் டொலர்கள் வரை அதிகரிக்க திட்ட மிடப்பட்டிருப்பதாகவும் கூறினார். (உ)



# 39 கோவில்களுக்கு நிதி உதவி

நவராத்திரி பூஜையை முன்னிட்டு கொழும்பு நகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அமைந் துள்ள 39 கோவில்களுக்கு நிதி உதவி வழங்கப் பட்டுள்ளது. குறித்த நிகழ்வு நேற்று அலரிமாளி கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலை மையில் நடைபெற்றது. நிதி உதவி வழங்கும் நிகழ்வில் சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், மேல் மாகாண ஆளுநர் சிவலோகநாதன், சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (உ)

# நாட்டுக்கு எதிரான கருத்துக்களை ஏற்கமுடியாது

நாட்டில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத் துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப் புடன் செயற்படும்வேளையில், நாட்டுக்கு எதிராக முன்வைக் கப்படும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சர் சந்திம வீரக் கொடி தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்ட அமைச்சர், அர சாங்கம் சர்வதேச ரீதியாக வெற்றி கொண்டுள்ளமை ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்தின் மூலம் புலப் பட்டுள்ளதாகவும் குறிப்பிட் டார். விசேடமாக நாட்டின் அபிவிருத்தி, சகவாழ்வு செயற் பாடுகளை வலுவாக முன்னெ டுப்பதற்கும், ஜனநாயக செயற் பாடுகளுக்கும் அரசாங்கம் முன்னெடுக்கும் பணிகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஒத்து ழைப்பு தொடர்ந்து கிடைக் கும் என்று சர்வதேச தலைவர் கள் ஜனாதிபதியிடம் உறுதி யளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

# நாளை நாளும் கோளும்

29.09.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 12 ஆம் நாள்

அட்டமி மு.இ. 08.35 வரை | மூலம் மு.ப. 01.03 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 01.32 - 03.02 | சுபநேரம் 07.32 - 09.02 | எமகண்டம் 06.02 - 07.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சாதனை | சிந்தனை | சினம் | யோகம் | நன்மை | வெற்றி | வீண்செலவு | உழைப்பு | தனம் | கவனம் | இலாபம் | இரக்கம் |

எதிரொலி
Ethiroli

## கழுத்தை வெட்டிக் கொன்றவருக்கு

# 23 வருடங்களின் பின் மரண தண்டனை

வேயாங்கொட கோரஸ் பிரதேசத்தில், கூரிய ஆயுதத்தினால், இளைஞன் ஒருவனின் கழுத்தை வெட்டி படுகொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த, அதே பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதான நபருக்கு, மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. கம்பஹா மேல் நீதிமன்ற நீதவான் பிரியந்த பெர்ணான்டோ, இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கினார். இந்தப் படுகொலை, 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதியன்று இடம்பெற்றுள்ளது. இந்த வழக்கின், பிரதிவாதியான அந்த நபருக்கு, கம்பஹா மேல் நீதிமன்றத்தினால் இதற்கு முன்னரும் பிறிதொரு வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், ஜூரிகள் சபை முன்னிலையில், அந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு, உயர்நீதிமன்றத்தில், பிரதிவாதி மேன்முறையீடு செய்திருந்தார். அதன்பின்னர், சந்தேகநபர் பிணையில் விடுக்கப்பட்டார். இந்த வழக்கு, ஏழு ஜூரிகளின் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. எனினும், சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல், நீதிமன்றத்துக்கு தலைமறைவாகியிருந்தார். ஆகையால், அந்த வழக்கானது பிரதிவாதி இன்றியே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர், வெளிநாட்டுக்கு சென்றுவிட்டதாக, குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தது. இந்த நிலையில், பிரதிவாதியை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம், அவரை கைதுசெய்வதற்கு திறந்த பிடியாணையை பிறப்பித்தது. (எ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1983.09.27**

இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பில் சிறை உடைப்பில் பல தமிழ் அரசியல் கைதிகள் தப்பி ஓடினர்.

## கல்கிசைத் தாக்குதல்: காட்டுமிராண்டித்தனம்

“ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையில், கொழும்பு, கல்கிசையில் தங்கவைக்கப்பட்டுள்ள றோகிஞ்சா அகதிகளை, அங்கிருந்து வெளியேற்றச் செய்து அகதிகளையும் முஸ்லிம்களையும், மிகவும் மோசமான முறையில் தூஷித்து அடாவடித்தனம் மேற்கொண்ட இனவாதிகள் மீது, அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்று, கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார். அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்கவை சந்தித்தபோதே, அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். கல்கிசையில் இடம்பெற்ற இந்த மிலேச்சத்தனமான சம்பவங்களை விவரித்ததுடன், அதுதொடர்பிலான காணொளியையும் அவரிடம் காட்டினார். (உ)

## பஸ் மீது கல் வீச்சு

கொழும்பு, கட்டுநாயக்காவிலிருந்து காத்தான்குடி நோக்கிச் சென்ற பஸ் மீது, மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் வைத்து இன்று அதிகாலை கற்கள் வீசப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பு மத்திய பஸ் டிப்போவுக்குச் சொந்தமான இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ், கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு, காத்தான்குடி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, சத்துருக்கொண்டானில் வைத்து குறித்த பஸ்ஸின் மீது கற்கள் வீசிப்பட்டுள்ளன. இதனால் பஸ்ஸின் கண்ணாடிகள் உடைந்துள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி மற்றும் நடத்துநர்மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## உரிமைகளைக் கேட்பதில் தயக்கம் காட்டுகின்றனர்

எமது அரசியல்வாதிகள் பலர் எமக்கான உரிமைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதில் காட்டும் தயக்கத்தினாலேயே எம் சமூகத்திற்கான பல நியாயமான உரிமைகள் கிடைக்காமல் போவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார். யாருக்கும் அச்சம், தயக்கமின்றி ஆளுமையுடன் எமக்கான நியாயபூர்வமான உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய அரசியல் தலைமைகளை உருவாக்க முஸ்லிம் சமூகம் முன்வர வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார். ஓட்டமாவடி அல் ஹிதாயா மகா வித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழாவில் நேற்று பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ)

## வெளிவிவகார அமைச்சர் பெல்ஜியம் பயணம்

பெல்ஜியத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, அந்த நாட்டின் பிரதிப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சருமான, டிடியர் ரென்டேர்சுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். பிரசெல்சில் உள்ள எக்மன்ட் பலசில் இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது. இதன் போது இருதரப்பு விவகாரங்கள் மற்றும் உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ)

## மட்டு அரச அதிபர் சாள்ஸ் சுங்கப் பணிப்பாளராக நியமனம்



சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் சூலானந்த பெரேரா, அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, புதிய பணிப்பாளராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் பரிந்துரைக்கு அமைய, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், அமைச்சரவையினால், இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சுங்கத் திணைக்களப் பணிப்பாளராக இருந்த சூலானந்த பெரேரா, பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் மேலதிகச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். பொது நிர்வாகத்துறையில் 26 ஆண்டுகள் அனுபவம் பெற்ற பி.எம்.எஸ்.சார்ள்ஸ், இலங்கை நிர்வாக சேவையின் சிறப்புத் தர அதிகாரியாவார். இவர் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராகப் பொறுப்பேற்பதற்கு முன்னர், வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபராகவும், அரச அதிபராகவும் பணியாற்றியிருந்தார். 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலங்கை சுங்கத்திணைக்கள வரலாற்றில், பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள இரண்டாவது பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சேலை ஏந்திய விவகாரம் செயலருக்கு இடமாற்றம்

திருமண வைபவமொன்றில், மணப்பெண் அணிந்திருந்த சுமார் 3.2 கிலோமீற்றர் நீளமான சேலையை, பாடசாலை மாணவர்கள் ஏந்தியிருந்த விவகாரத்தையடுத்து, மத்திய மாகாண கல்வியமைச்சின் செயலாளர் பி.பீ விஜயரத்ன, இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவர், ஊவா மாகாண பிரதான செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று மத்திய மாகாண பிரதான செயலாளர் சரத் பிரேமவங்ச தெரிவித்தார். இந்த இடமாற்றம் தொடர்பில் எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, இந்த விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவை, அக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிப்பதாக, மத்திய மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க, கடந்த 25ஆம் திகதியன்று அறிவித்திருந்தார். (உ)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சுவிஸ்குமார்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்க முயன்றார். அமைச்சர் விஜயகலா சுவிஸ் குமாரைக் காப்பாற்றி அவர் வெள்ளவத்தைக்கு தப்பிச் செல்ல உதவினார் என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றின் உத்தரவின் அடிப்படையில் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வாக்குமூலமும் பெறப்பட்டிருந்தது. சுவிஸ் குமாரைத் தப்பபிக்க உதவியவர்கள் தொடர்பான பிறிதொரு வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

**வித்யா கொலை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கத் தவறின் 2 வருடச் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. 4ஆம் எதிரியான மகாலிங்கம் சசிதரன், 8ஆம் எதிரியான ஜெயதரன் கோகிலன், 9ஆம் எதிரியான மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் சகல குற்றங்களுக்கும் உடந்தையாக இருந்த குற்றச்சாட்டுக்களுக்காக மரணதண்டனையும் 30 வருட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. அவர்களுக்கு 70 ஆயிரம் ரூபா தண்டமும் தண்டம் செலுத்தத் தவறின் ஏழு மாதச் சிறைத்தண்டனையும் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடும் இழப்பீடு வழங்கத் தவறின் 2 வருடச் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

முதலில் தீர்ப்பாயத்தின் தலைவரான நீதிபதி சசிமகேந்திரன் தனது தீர்ப்பில், 1ஆம், 7ஆம் எதிரிகள் தவிர்ந்த ஏனைய 7 எதிரிகள் மீதான கூட்டு வன்புணர்வு, கொலை, கொலைச்சதி குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறியிருந்தார். இதையடுத்து, தீர்ப்பாயத்தின் மற்றொரு நீதிபதியான அன்னலிங்கம் பிரேம்சங்கரும், அதே தீர்ப்பையே அளித்திருந்தார். மூன்றாவதாக, நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பை வாசித்தார். அவர் தனது தீர்ப்பில் 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம், 8ஆம், 9ஆம் எதிரிகளான பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசீந்திரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்தன், ஜெயதரன் கோகிலன், மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாகத் தீர்ப்பளித்துள்ளார். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத முதலாவது, ஏழாவது எதிரிகளை விடுவிக்குமாறும் அவர் தீர்ப்பளித்துள்ளார்.

இதையடுத்து, குற்றவாளிகளாக காணப்பட்ட 7 பேரையும் நோக்கி, உங்களுக்கு ஏன் மரணதண்டனை விதிக்கக் கூடாது என்று தீர்ப்பாயத்தின் நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். தனித்தனியாக அவர்களின் விளக்கங்கள் கோரப்பட்டன.

இந்த நிலையில் 7 பேருக்கும் மரணதண்டனையும் தலா 30 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பாயம் ஒருமித்த தீர்ப்பை வழங்கியது.ஜனாதிபதி தீர்மானிக்கும் நாளில், உயிர் பிரியும் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மரணதண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்ட போது நீதிமன்றத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டன. தீர்ப்பைக் கேட்டதும், குற்றவாளிகளின் உறவினர்கள் ஓலமிட்டு அழுதனர். (எ)

**இருவர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூபாலசிங்கம் இந்திரகுமார் மற்றும் ஏழாம் எதிரியாக அடையாளப்படுத்தப்பட்ட பழனிரூபசிங்கம் குகநாதன் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இருவருக்கும் எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இன்மையின் அடிப்படையில் யாழ். மேல் நீதிமன்றதில் கூடிய ட்ரயல்-அட்பார் நீதிமன்றம் இன்று குறித்த தீர்ப்பை வழங்கியுள்ளது. (எ)

**470 பக்கத்தில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் 130 பக்க தீர்ப்பை வாசித்தார். நீதிபதி மாணிக்கவாசகம் இழஞ்செழியன் தனது 340 பக்க தீர்ப்பின் சாரம்சத்தை வாசித்ததோடு நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரனின் தீர்ப்பினை ஏற்றுக் கொள்வதாக குறிப்பிட்டார். நீதிபதி பிரேம்சங்கர் தீர்ப்பினை வாசிக்கவில்லை. அவர் நீதிபதி சசிமகேந்திரன் மற்றும் நீதிபதி இளஞ்செழியன் ஆகியோரது தீர்ப்புக்களை தான் ஏற்றுக்கொள்வதா அறிவித்தார். (எ)

**மன்றில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பு இன்று வெளியிடப்பட்டது. நீதிபதிகள் தீர்ப்பை வாசித்து முடித்தபோது மன்றில் இருந்த வித்யாவின் தாயர் மயங்கி விழுந்தார். இதேவேளை தீர்ப்பின்போது வித்யாவின் தாயார் வழங்கிய சாட்சியம் மற்றும் அரசதரப்பு சாட்சியாக மாற்றப்பட்ட சுரேஸ்கரன் வழங்கிய சாட்சியம், மாப்பிள்ளை என்ற, நடராஜா புவனேஸ்வரனின் சாட்சியம் என்பனவற்றை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுள்ளார். குற்றம் இடம்பெற்ற போது, எதிரிகள் அதனை ஒளிப்பதிவு செய்தனர் என்ற சாட்சியத்தையும், 2 ஆம் எதிரிக்கு எதிராக 13 வயதுச் சிறுவன் அளித்த சாட்சியத்தையும், புலனாய்வு அதிகாரிக்கு இலஞ்சம் கொடுக்க சிறைக்குள் நடந்த பேரம் தொடர்பாக கைதியாக இருந்த ஒருவர் அளித்த சாட்சியத்தையும் உண்மையானவை என்று ஏற்றுக் கொள்வதாகவும் தீர்ப்பாயம் கூறியுள்ளது. (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 27.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.